**செய்தி வெளியீடு எண்: 992** **நாள்: 10.11.2010.**

## 6-வது தேசிய சாலைப் பாதுகாப்பு விருது

சாலைப் பாதுகாப்பில் வியத்தகு சாதனைகள் புரிந்த தனிநபர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசின் தரைவழி மற்றும் தேசிய நெடுஞ்சாலை அமைச்சகம் சாலைப் பாதுகாப்பு தேசிய விருது ஒன்றினை அறிவித்துள்ளது.

2) கடந்த பல ஆண்டுகளில் சாலைப் பாதுகாப்பு சார்ந்த துறைகள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகளில் சாதனை புரிந்த தனி நபர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு சாலைப் பாதுகாப்பு 6-வது தேசிய விருதினை மத்திய அரசு அறிவித்துள்ளது.

3) இவ்விருது தனிநபர்களுக்கு ரொக்கத் தொகையாக ரூ.50,000/-ம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.1 லட்சமும் அதோடு நற்சான்றிதழ் மற்றும் பதக்கமும் அளிக்கப்படும். 2ம் பரிசு பெறுவோருக்கு ரூ.15000/- ரொக்கப் பணமும், நற் சான்றிதழும் வழங்கப்படும்.

4) சாலைப் பாதுகாப்புத் திட்டத்தில் பணிபுரிந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் தரத்தைப் பொறுத்து விருது பெற நபர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

இந்தத் தேசிய விருதுக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளின் நகல் ஒன்றினை பெற விரும்புவோர் கீழ்க்கண்ட மத்திய அரசின் வலைதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். வலைதள முகவரி www.morth.nic.in

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் சம்மந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.11.2010.

போக்குவரத்து ஆணையர்,<br>சேப்பாக்கம், சென்னை-5.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**